*Kalanjiyam International Journal of Tamil Studies* **ISSN: 2456-5148 (Online)**
*An international, peer-reviewed quarterly academic research journal* **www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p342-348** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# தமிழர் இறைமரபின் அடையாளங்களும் குறியீடுகளும்

## Symbols and Signs of Tamil Religious Tradition

**முனைவர் க.கருப்பசாமி,**

உதவிப்பேராசிரியர் - தமிழ், அறிவியல் மற்றும் மானுடவியல்துறை,
ஏஏஏ பொறியியல் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி, ஆமத்தூர், சிவகாசி, தமிழ்நாடு..

**Dr. K. Karuppasamy*,**
*Assistant Professor – Tamil, Department of Science and Humanities,*
*AAA College of Engineering and Technology, Amathur, Sivakasi, Tamil Nadu.*
***ORCID*** *– https://orcid.org/0009-0008-7121-4264, EMail: eswaransvpt@gmail.com*

*Article history*
Received: 10-08-2026
Revised: 10-08-2026
Accepted: 12-08-2026
**Published: 17-08-2026**
Corresponding Author Email:
*eswaransvpt@gmail.com*

**Abstract:** During the Sangam period, worship played an important role among tribal communities. It is believed that this worship may have originated in connection with valor and heroism. The practices of spirit and soul worship observed in tribal society are reflected in the tradition of hero stone (Nadukal) worship.

In mountainous regions, tribal people often fought to protect themselves from wild animals. Those who died heroically in such battles were honored with memorial stones known as hero stones or Nadukal. These stones were inscribed with the names and fame of the heroes so that future generations could remember them. The practice of installing stones in memory of the dead and worshipping them led to the origin of Nadukal worship among tribal communities.

Over time, these practices evolved and continued with rituals and respect from successive generations. In the present context, such traditions have become symbolic representations and identifiers of divine worship and have also laid the foundation for the worship of minor deities.

**Keywords:** *Tribal community, Hero stone (Nadukal), Worship, Belief, Valor.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலத்தில் இனக்குழு மக்களிடம் இறைவழிபாடானது முக்கிய அங்கம் வகித்தது. இறைவழிபாடானது வீரத்தின் பொருட்டு தோன்றியிருக்க வேண்டும். இனக்குழுச் சமூகத்தில் நிகழ்த்தப்படும் ஆவி மற்றும் ஆன்மா வழிபாடு நடுகல் வழிபாட்டை உணர்த்துகிறது. மலைப் பகுதியில் வாழ்ந்த இனக்குழு மக்கள் விலங்குகளிடைமிருந்து தன்னைப் பாதுகாத்து கொள்ளச் சண்டையிட்டுத் தோற்றுப் போகும் வீரர்களுக்கு வீரர்கற்கள், நடுகற்கள் என்னும் பெயரில் வீரர்களது பெயர், பெருமையினை அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில், அவர்கள் நினைவாகக் கல் நட்டு வழிபாடு செய்தமையால், இனக்குழு மக்களிடம் நடுகல் வழிபாடு தோற்றம் பெற்றது எனலாம். இவையே நாளடைவில் அடுத்தடுத்த தலைமுறையினர் மாலை மரியாதையுடன் செய்யப்பட வழிபாடானது, இன்றைய காலகட்டத்தில் இறைவாழிபாட்டிற்கு அடையாளங்களும் குறியீடுகளும் சிறுதெய்வ வழிபாட்டிற்கு அடிகோலியது எனலாம்.

குறிப்புச் சொற்கள்: இனக்குழு, நடுகல், வழிபாடு, நம்பிக்கை, வீரம்

**முன்னுரை**

பண்டையக் காலத்தில் இனக்குழு மக்களிடம் இறைவழிபாடானது முக்கிய அங்கம் வகித்தது எனலாம். இறைவழிபாடானது வீரத்தின் பொருட்டுத் தோன்றியிருக்க வேண்டும். காட்டுப் பகுதியில் வாழ்ந்த இனக்குழு மக்கள் விலங்குகளிடைமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளச் சண்டையிட்டுத் தோற்றுப் போகும் வீரர்களுக்கு வீரர்கற்கள், நடுகற்கள் என்னும் பெயரில் வீரர்களது பெயர், பெருமையினை அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில், அவர்கள் நினைவாகக் கல்நட்டு வழிபாடு செய்தமையால், இனக்குழு மக்களிடம் நடுகல் வழிபாடு தோற்றம் பெற்றது எனலாம். இவையே நாளடைவில் அடுத்தடுத்த தலைமுறையினர் மாலை மரியாதையுடன் செய்யப்பட வழிபாடானது, இன்றைய காலகட்டத்தில் இறைவாழிபாட்டிற்கு அடையாளமும் குறியீடாகவும் சிறுதெய்வ வழிபாடு அடித்தளமாக உயர்ந்துள்ளதை வெளிக்கொணரும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**நடுகல் மரபு**

நடுகல்லானது பெரும்பாலும் போரில் வீரமரணம் அடைந்த வீரனுடைய குடும்பத்தார்களால் நடப்படுகிறது. இறந்துபட்டவர் எதற்காக இறந்தார் என்ற காரணத்தை அடையாளமாகவும், குறியீடாகவும் கல்வெட்டுகளாகச் செதுக்கி வைத்துள்ளனர். போரில் இறந்த வீரனுக்கு மட்டுமில்லாது, மற்ற வீரமிக்கச் செயல்கள் புரிந்த வீரர்களுக்கும் நடுகல் வைக்கும் மரபு தமிழர்களிடம் இருந்துள்ளது.

நடுகல் வழக்கம்

நடுகல் வழிபாடு என்பது கல் வைத்து நட்டு வழிபாடு செய்வதாகும். பழமையான சமுதாயத்தில் வீரமும், பெருமையும் கொண்டவர்கள் இறப்பிற்குப் பின் செய்யப்படும் வழிபாடாகும். பழந்தமிழர்கள் வீரத்தின் அடையாளமாக இக்கல் வழிபாட்டை மேற்கொண்டனர். நாளடைவில் புகழ், மானம், நட்பு போன்றவற்றிற்காக இறந்தவர்களுக்கும் நடுகல் நடப்பட்டது. இத்தகைய வழிபாட்டைத் தொல்காப்பியர்,

"காட்சி, கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று வகையில் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே"

என்னும் நூற்பா மூலம் எடுத்துரைக்கிறார் (தமிழண்ணல்,2017). தொல்குடியான தமிழர்கள் போர்க்களத்தில் இறந்த வீரர்களை நடுகல்லில் தெய்வமாக உருமாக்கிக் கல்லைக் காணுதல், நீராட்டல், தக்க இடத்தில் நடுதல், சிறப்பு மிக்க பெரிய படையிலிடுதல், பின்பு கோயிலாக சிற்பம் எழுப்பி வழிபாடு செய்தலை மேற்கொண்டு வந்துள்ளனர்.

மேலும், பகைவரே! என்னுடைய தலைவர் முன் எதிர்த்து நிற்காதீர்கள், என்னுடைய தலைவர் முன் எதிர்த்து நின்று கல் வடிவாய் பலர் நின்றுள்ளதை,

"என்ஐ நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர்"

என்ற குறள் மூலம் நடுகல் வைக்கும் வழக்கத்தைத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். (இரா.நெடுஞ்செழியன்,2011)

"சங்ககாலத்தில் நடுகல் எடுக்கும் வழக்கம் ஆண்களுக்கு மட்டும் இருந்தது. ஆனால் காலப்போக்கில் பெண்ணுக்கும் நடுகல் எடுத்துக் கடவுளாக்கிய நிலையினை முதன் முதலில்,

"மதுரை மூதூர் மாநகர் கேடுறக்
கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்து
நன்னா டணைந்து நளிர்ச்சினை வேங்கைப்
பொன்னணி புதுநிழற் பொருந்திய நங்கையை
அறக்களத் தந்தண ராசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று
மேலோர் விழையு நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து"

என்று இளங்கோவடிகள், தொல்காப்பியர் காட்டும் நெறியில் நின்று கண்ணகிக்குக் கல்நட்டிக் கடவுளாக்கிய புதுமையினைச் செய்துள்ளார். இதனைக் "காலத்தால் ஏற்பட்ட வழிபாட்டு மாற்றம்" என்று க.காந்தி அவர்கள் கூறுகிறார். (க.காந்தி,2008)

**நடுகல் வழிபாட்டின் தோற்றம்**

இனக்குழு மக்கள் பின்பற்றப்பட்ட நடுகல் வழிபாடானது தொன்றுதொட்டு இன்றளவும் காலங்கடந்து மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. பூமியில் குழி தோண்டி, குழிக்குள் பால், மஞ்சள் தண்ணீர் ஊற்றி சடங்குகள் செய்து கல்லைக் குளிப்பாட்டி, குழிக்குள் கல்லை நட்டுவைத்துத் தெய்வமாக வணங்கும் மரபு இன்றளவும் காணப்படுகிறது. "ஆவிகளுக்குத் தொடர்பு இல்லாத, வடிவம் இல்லாத படிமங்களையும், கற்களையும் ஏன் வழிபட வேண்டும் என்பதற்கு இனமரபுச் சின்னமுறை விடையளிக்கிறது. முதன் முதலில் ஆவி தோன்றிய இடத்தைக் குறிப்பிட பலிகொடுத்து இரத்தம் சிந்திய இடத்திலேயே தெய்வம் அல்லது ஆவி குடி கொண்ட இடமாக்குவர், அவ்விடத்தைக் குறிப்பிட்டுக் கல் நடுவர். நாளடைவில் அக்கல் தெய்வமானது" என்பதன் மூலம் நடுகல் வழிபாட்டின் தோற்றத்தை அறியமுடிகிறது. (துளசி இராமசாமி,1985)

**நடுகல் வழிபாடு**

"இனக்குழு மரபிலிருந்து தோன்றம் கண்டு வீரத்தின் அடையாளமாக வீரமரபிற்குரிய வழிபாடாக மாற்றம் கண்டதே நடுகல் வழிபாடு. 'நடுகல்' (ர்நசழ-ளுவழநெ) என்பது பெருங் கற்கல்லறைகள் (ஆநபயடiவாள) என்ற சடங்குரீதியான நினைவுச் சின்னமாகும். சங்ககால நடுகல் என்பது வெகுபுராதனமான 'ஆநnhசை' எனும் வடிவத்தின் நாகரிகமாகத் தெரிகிறது. வேட்டை, ஆநிரை கவர்தல், மீட்டல் ஆகிய நிகழ்வுகளில் நடந்த போராட்டங்களில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு காடுகள், சுரங்கள் ஆகிய இடங்களிலிருந்த சிறு பாதைகள், வண்டிப்பாதைகள் ஆகியவற்றின் ஓரங்களில் நடுகற்களை நட்டு வைத்து, அவற்றில் இறந்த வீரர்களின் பெயர்களையும் வீரத்தின் செயல்களையும் உளியால் செதுக்கி வைத்து வழிபாடு செய்வது சங்ககால மக்களின் அடையாளமாக இருக்கிறது" என்று ராஜ்கௌதமன் கூறுகிறார். (ராஜ்கௌதமன்,2012)
குற்றமில்லாத தொடையையுடைய வீரரின் அம்பினால், இறந்தவரது பெயர் பொறிக்கப்பட்டது நடுகல் என்பதை பின்வரும் பாடலானது,

"விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல்"

என்று கூறுகிறது. இனக்குழு மக்கள் மட்டுமல்லாது, மறக்குடிகள் வாழ்ந்த சீறூர் மக்களும், மூதின் மகளிரும் நடுகல் வழிபட்டதை,

“களிறுபொரக் கலங்கு, கழல்முள் வேலி
அரிதுஉண் கூவல், அம்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்தல் ஒள்நுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும், ஒடியாது:
விருந்தெதிர் பெறுகதில் யானே, என்னையும்
ஒ……………………………… வேந்தனொடு
நாடு தரு விழுப்புகை எய்துக எனவே.”

என்று கூறுகிறது.

**குறியீடு**

போரில் வீரமரணம் அடைந்த வீரரைக் கல்லில் வைத்து வழிபடும் பழக்கம் இருந்தது. வீரனின் நினைவிற்காகக் கற்கள் எழுப்பப்பட்டு, அவற்றின் அருகில் கேடயங்களும், ஈட்டிகளும் வைக்கப்பட்டதை,

“கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி
நடுகல்லின் அரண்போல”

என்னும் பாடலின் மூலம் அறியமுடிகிறது. இத்தகைய கற்கள் ‘நடுகற்கள்’ எனப்பெயர் பெற்றுத் தெய்வங்களாக வழிபட்டு வரப்பெற்றன. கல்லை வெட்டி எடுத்து, வீரனின் பெயர் தெரியுமாறு கல்லை அகழ்ந்து ‘இவ்வாறே பொருது பட்டான் இன்னான்’ என்று அவன் பெயர் உலக மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் எழுதி, மராமரத்தின் நிழலில் நட்டு வைத்து, இறைத்தன்மையுடன் தெய்வமாக வழிபட்டு போற்றி வந்தனர் என்று,

“……………… பெயர்மருங்கு அறிமார்
கல்லெறிந்து எழுதிய நல்லரை மராஅத்த
கடவுள் …………………………………”

இப்பாடல் கூறுகின்றது. நடுகல்லில் நடுகற்களான வீரனின் பெயரும், சிறப்பும் பொறித்தது, அவனது படைக்கலங்களை நடுகற்கருகிலேயே ஊன்றியிருந்தது என்பதனை,

“நடைமெலிந் தொழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி யுகுநீர் துடைத்த ஆடவரும்
பெயரும் பீடு மெழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
வெருவரு தகுந கானம்”

என மருதனிளநாகனார் கூறுகிறார்.

நடுகல்லானது செங்குத்தாக நடப்பட்டிருக்கிறது. அதில் ஓர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. போரில் மாண்ட வீரனைப் பற்றி இக்கல்லில் குறிப்பு உள்ளது. காலப்போக்கில் வீரனின் பெயர், அவன் வீழ்த்தப்பட்ட சூழல் போன்றவை அக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. நடுகல்லின் மீது மயில் தோகை மாலைபோல சூடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நடுகல்லின் முன்பும் வேல் ஊன்றி அவ்வேலின் மேல் கேடயப் பலகை சார்த்தப்பட்டுள்ளது. வீரனும் வேலும் கேடயமுமாகக் காட்சி தரும் இவ்விடமானது, போர்க்களக்காட்சி போல் பயம் தரக்கூடியதாக உள்ளதை,

"நட்ட போலும் நடாஅ நெடுங்கல்

ஆகலிடம் குயின்ற பல்பெயர் மண்ணி

நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய

அம்புகொண்டு அறுத்த ஆர்நார் உரிவையின்"

என்னும் அகநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகின்றது. யானை ஒன்று நடுகல்லை ஆள் என்று எண்ணி மோதியதால் நகம் உடைந்து வருந்தியதை,

"அத்த நடுகல் ஆள்என உதைத்த

கான யானைக் கதுவாய் வள்ளுகிர்

இரும்பனை இதக்கையின் ஒடியும் ஆங்கண்"

என்னும் பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. பாலை நிலப்பகுதியில் ஆங்காங்கு நடுகற்கள் காணப்பட்டது. அவை அழகற்ற தாடையையும், கொடுமையையும் உடைய வீரர்களுடைய அம்புகள் அடிக்கடி உராய்ந்தமையால் இடையில் தேய்ந்து நிற்கின்றன. அவற்றில் அங்கு இறந்தோரின் பேரும், பெருமையும் எழுதி வைத்துள்ள எழுத்துக்களைப் பொறுமையாகப் பார்க்கக்கூட மனமின்றி, அவ்வழிச் செல்லும் வழிப் போக்கர்கள் அச்சத்தினால் வேகமாக நடப்பதை,

"மருங்குல் நுணுகிய பேஎம்முதிர் நடுகல்,

பெயர்பயம் படரத் தோன்று குயில்எழுத்து

இயைபுடன் நோக்கல் செல்லாது, அசைவுடன்

ஆறுசெல் வம்பலர் விட்டனர்................................"

"ஒரே நடுகல்லில் இரண்டு வீரர்களின் சிற்பங்கள், இறந்த வீரனுக்காக உடன்கட்டை ஏறிய இரண்டு மனைவிகளின் சதிக்கல், நின்ற சிலையில் நவகண்டம் கொடுக்கும் வீரனின் சிற்பம். மேலும் அமர்ந்த நிலையில் நவகண்டம் கொடுக்கும் நடுகல் வீரன், குத்துவிளக்கு, கெண்டி, சொர்க்கம் முதலானவை செதுக்கப்பட்டுள்ள நடுகல்லானது மக்களின் வழிபாட்டு நம்பிக்கைகளை வெளிக்கொணர்கிறது" என்று சி.இளங்கோ கூறுகிறார். (சி.இளங்கோ,2015)

**முடிவுரை**

இனக்குழுச் சமூகத்தில் நிகழ்த்தப்படும் ஆவி மற்றும் ஆன்மா வழிபாட்டு மரபை நடுகல் வழிபாடு உணர்த்துகிறது. மனிதனோடு தொடர்புடைய நடுகற்கள், மக்களுடைய வாழ்வியலையும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் நமக்கு வெளிப்படுத்தும் சான்றாக உள்ளது. நடுகற்கள் வழி உருவான அச்சத்தினையும், நடுகல் வீரர்களுக்கு அன்றைய மக்கள் செய்த மரியாதையும் அறிந்து கொள்ள முடிகிறது. நடுகல்லில் இறந்த மனிதனின் பெயர், சிறப்பு முதலானவை எழுதப்பட்டிருப்பதன் மூலம் அன்றைய சமூகத்தில் நிலவிய கல்வி அறிவையும் காணமுடிகிறது. இவையே நாளடைவில் சிறுதெய்வ வழிபாட்டிற்கு அடிகோலியது எனலாம்.

**துணைநின்ற நூல்கள்**

[1.] தமிழண்ணல், சங்க இலக்கிய மக்கள் பதிப்பு வரிசை, கோவிலூர் மடாலயம், கோவலூர், முதற்பதிப்பு- செப்டம்பர்-2004.

[2.] தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், பக்.315, மீனாட்சி புத்தக நிலையம், தானப்பமுதலி தெரு, மதுரை. ஐந்தாம் பதிப்பு - ஆகஸ்ட்-2017.

[3.] இரா.நெடுஞ்செழியன், திருக்குறள் தெளிவுரை, பக்.374, நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை, சென்னை. ஐந்தாம் பதிப்பு-2011.

[4.] க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், பக்.253, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை. பதிப்பு: 2008.

[5.] துளசி இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், பக்.13, காவ்யா பதிப்பகம், நெல்லை. பதிப்பு: 1985.

[6.] ராஜ்கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், பக்.182, தமிழினி பதிப்பகம், சென்னை. இரண்டாம் பதிப்பு: டிசம்பர்-2012.

[7.] சி.இளங்கோ, தொல் தமிழர் வரலாறும் பண்பாட்டு ஆய்வுகளும், பக்.62, அலைகள் வெளியீட்டகம், சென்னை. முதற்பதிப்பு:2015.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL

கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work